## தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் - 2017

---

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவனத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகத்தின் தாபிப்பு

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனமானது அரச பொறியியல் கூட்டுத்தாபனம் மற்றும் கட்டிட திணைக்களத்தின் நில ஆராய்ச்சி ஆய்வுகூடம் போன்றவற்றின் நிறுவனங்களுடன் நிலையான செயற்பாடுகளை செயற்படுத்துவதற்கு தனியான நிறுவனமொன்றை தாபிப்பதற்கு 1993 செப்தெம்பர் 29 இல் 93/340/173 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம், அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் தாபிக்கப்பட்டிருந்தது. நிறுவனமானது பாராளுமன்ற அதிகாரச் சட்டமொன்றின் கீழ் தாபிக்கப்படாததனால். நிறுவனத்தால் நிர்மான நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட சான்றிதழ்களின் மதிப்புடைமை பிரச்சினைக்கிடமாக இருந்தது. மேலும், அபாயகரமான பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்ற நிர்மாண நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நபர்களிற்கு எதிராக ஆராய்ச்சி நிறுவனத்தால் எடுக்கப்பட வேண்டிய பின்தொடர் நடவடிக்கைகளிற்காக காணப்படும் சந்தர்ப்பங்கள் வரையறுக்கப்பட்டிருந்தது.

### 1.5. முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1. இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 48 ஆம் பந்தி பிரகாரம், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தால் வேண்டப்படும் அல்லது அங்கீகரித்துள்ள சந்தர்ப்பங்களைத் தவிர சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் வருமானமும் செலவினமும் பதிலீடு செய்யக் கூடாதெனினும் நிறுவனத்தின் 06 பிரிவுகளால் உழைத்திருந்த ரூபா 814.73 மில்லியன் வருமானம் அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 772.99 மில்லியன் பதிலீடு செய்யப்பட்டு நிதிச் செயலாற்றுகை கூற்றில் ரூபா 41.74 மில்லியன் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தின் கட்டிட வாடகையாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 520,000 ஆன தொகையை புது விஞ்ஞானகூட கட்டிட நிர்மாணத்திற்காக செலுத்தப்பட்ட மூலதன செலவினமாக பூர்த்தி செய்யப்படாத வேலையின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) மூன்று சேவை பெறும் நிறுவனங்களினால் முற்பணமாக மீளாய்வாண்டினுள் பெறப்பட்டிருந்த ரூபா 1.65 மில்லியன் தொகை நிதிக்கூற்றுக்களில் கிடைத்த முற்பணத்தின் கீழ் காட்டப்படாமல் கடன்பட்டோர் பெறுமதிக்கு பதிலீடு செய்து காட்டப்பட்டிருந்தது.

(இ) மானிட வதிவிடத் திட்டமும் ஆராய்ச்சியும் மற்றும் மண்சரிவு ஆராய்ச்சியும் அபாய முகாமைத்துவம் போன்ற பிரிவுகளால் செயற்படுத்தபடும் சமுதாய அடிப்படை முன் எச்சரிக்கை, தன்னியக்க மழைமாணி மற்றும் அபாய பகுதிகளின் வரைபடம் போன்ற கருத்திட்டங்களின் செலவினத்தினுள் நிறுவனத்தின் தாபன பிரிவிற்கான மேந்தலைக் கிரயம் ரூபா 19.82 மில்லியனும் உள்ளடக்கப்பட்டிருந்தமையால் தாபன பிரிவின் மேந்தலைச் செலவினம் அவ் அளவினால் குறைத்துக் காட்டப்பட்டது.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

நிறுவனத்தினால் அதன் ஆளணி கிரயத்தை கட்டுப்படுத்துவதற்காக வேறாக கட்டுப்பாட்டு கணக்கொன்று பேணப்படாமை சம்பளம் மற்றும் வேதனங்களின் கிரயம் நிறுவனத்தின் பல்வேறு பிரிவுகளிடையில் பகிர்ந்திருந்தமை காரணமாக மொத்த ஆளணி கிரயத்தை நிதிக்கூற்றுக்களில் இனங்காண முடியாமல் இருந்தது.

### 2.3. பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 570,000 கூட்டு மொத்தத் தொகையான கேள்வி வைப்புக்கள் மற்றும் கேள்வி உத்தரவாத வைப்புக்கள் என்பவற்றின் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதில் ரூபா 440,000 கூட்டுத் தொகையான மீதிகள் 03 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தன.

(ஆ) மண்சரிவு ஆபத்து மதிப்பீட்டு அறிக்கை வெளியிடப்பட்டமைக்காக 05 பிரதேச சபைகளிலிருந்து ரூபா 630,000 கூட்டுத் தொகை 2014 ஆண்டு முதல் நிறுவனத்திற்கு கிடைக்க வேண்டியாக இருந்தது.

(இ) நிறுவனத்தின் சேவைகள் பெற்றுக்கொள்வதற்காக வாடிக்கையாலர்களால் நிறுவனத்திற்கு கொடுத்திருந்த தொகையில் உரிய வேலையை பூர்த்தி செய்ததன் பின்னர் எஞ்சிய ரூபா 1.28 மில்லியன் தீர்க்கப்படாமல் நிதிக்கூற்றுக்களில் வைப்பின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2009 ஆண்டு முதல் நிறுவனத்தின் நிதிக்கூற்றுகளில் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து அறவிடவேண்டியவையாக ரூபா 5.92 மில்லியன் மீதிகள் தொடர்ச்சியாக காட்டப்பட்டிருந்த போதிலும், அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டிய மீதியாக காட்டப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டதனால் அப் பணத்தை அறவிடுவது ஐயத்திற்கிடமாக இருந்தது.

### 2.4. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

---

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 754 மறறும் 756 | 2 மாவட்ட அலுவலகங்ளில் களஞ்சிய பதிவேடுகள் ஆண்டிறுதியில் சீராக்கப்பட்டு உள்ளவாறான மீதிகள் அப் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2013 ஒக்தோபர் 13 ஆந் திகதிய 21/2013 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | அமைச்சு செயலாளரின் அங்கீகாரமின்றி வார இறுதியில் மற்றும் அரச விடுமுறை தினங்களில் வேலைக்காக அலுவலர்களை மாதத்தில் இரண்டு நாட்களுக்கு மேலாக வேலையின் ஈடுபடுத்தியிருந்ததுடன் அதற்காக ரூபா 2.27 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | 2016 மார்ச் 24 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க முகாமை சேவை சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | சுற்றறிக்கையின் குறித்த ஏற்பாடுகளுக்கு மாற்றமாக 10 அலுவலர்களுக்கு மீளாய்வாண்டினுள் ரூபா 1.17 மில்லியன் ஆன தொகை படியாக கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான ஆராய்ச்சி நிறுவனத்தின் நிதி விளைவுகள் ரூபா 43.83 மில்லியன் ஆன மிகையாக இருந்ததுடன் நேரொத்த முன்னைய ஆண்டிலுள்ள மிகை ரூபா 47.92 மில்லியன் ஆனதால், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் நிதிசார் விளைவுகளில் ரூபா 4.09 மில்லியன் தொகை வீழ்ச்சியாக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டினுள் மதியுரை கட்டண வருமானம் ரூபா 3.51 மில்லியனினால் குறைந்தமை மற்றும் புவிச்சரித்திர பொறியியல் பிரிவின் வருமானம் ரூபா 11.39 மில்லியனால் குறைந்தமை மேற்குறிப்பிட்ட வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதிசார் விளைவுகளை பகுப்பாய்வு செய்யும் பொது 2013 ஆண்டில் ரூபா 11.23 மில்லியன் ஆன மிகை 2014 ஆண்டில் ரூபா 62.75 மில்லியன் வரை வளர்ச்சியடைந்திருந்த போதும் இவ்விடத்திலிருந்து தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து மீளாய்வாண்டின் போது ரூபா 43.83 மில்லியனாக இருந்தது. எனினும் ஊழியர் ஊதியம் அரசிற்கு செலுத்திய வரி மற்றும் பெறுமானத் தேய்வு என்பவற்றினை சீராக்கிய பின்னர் 2013 ஆண்டின் ரூபா 147.68 மில்லியன் ஆன பங்களிப்பு 2017 ஆண்டின் போது ரூபா 416.76 மில்லியன் வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

மீளாய்வாண்டினுள் சூழல் கற்கையும் சேவைகள் மற்றும் கட்டிட பொருட்கள் போன்ற பிரிவு வெளி நிறுவனங்களுக்கு சேவைகள் வழங்குவதனூடாக அப் பிரிவுகளின் மொத்த வருமானமான ரூபா 91.61 மில்லியனில் 90 இற்கு மேற்பட்ட சதவீதம் நிறுவனம் உழைத்திருந்த வருமானம் ஆனதுடன் மண்சரிவு ஆராய்ச்சி மற்றும் அபாய முகாமைத்துவம் மற்றும் மானிட வதிவிட திட்டமும் ஆராய்ச்சியும் போன்ற பிரிவுகள் அப் பிரிவுகளின் வருமானமாக குறிப்பிட்டிருந்த ரூபா 586.77 மில்லியனின் 75 சதவீதத்திக்கும் மேற்பட்ட வீதம் திறைசேரி மானியம் ஆனது.

## 4.. தொழிற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

### 4.1.1. செயலாற்றுகை மற்றும் மீளாய்வு

மண்சரிவு அபாயம் தொடர்பாக மதிப்பீட்டு சான்றிதழ் வழங்குவதற்கு மற்றும் விண்ணப்பம் கிடைத்த திகதியிலிருந்து 2 வார காலத்தினுள் சான்றிதழ் வழங்கப்பட வேண்டிய போதும் கண்டி மாவட்ட அலுவளகத்திற்கு விண்ணப்பம் கிடைத்து சான்றிதழ் வழங்க 03 மாதங்களையும் விஞ்சியிருந்த 14 சந்தர்ப்ங்கள் மற்றும் கேகாலை மாவட்ட அலுவளகத்திற்கு அதற்காக ஒரு மாதத்தை விஞ்சிய 417 சந்தர்ப்பங்களும் மேற்கொள்ளப்பட்ட மாதிரி பரிசோதனையின் போது இனங்காணப்பட்டிருந்தது. மேலும் சான்றிதழ்கள் ஒழுங்குப்படுத்தப்பட்டிருந்த போதும் விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படாது ஒரு மாதத்தையும் விஞ்சிய காலம் தடுத்து வைத்திருந்த 50 சந்தர்ப்பங்கள் கண்டி மாவட்ட அலுவலகத்தில் மேற்கொண்ட களப் பரிசோதனையின் போது இனங்காணப்பட்டது.

## 4.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆராய்ச்சி நிறுவனத்திற்கு சட்ட நிலைமையினை வழங்கவென அதிகார சட்டமொன்றை ஒழுங்கமைப்பதற்காக முன்வைக்கப்பட்டிருந்த அமைச்சரவை பத்திரத்திற்கு 2010 ஜுன் 02 திகதி அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன் அதன் பிரகாரம் ஒழுங்கமைக்கப்பட்ட சட்ட வரைபு 2012 செப்தெம்பர் 10 ஆம் திகதி சட்ட வரைபு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. எவ்வாராயினும் குறித்த அதிகாரச்சட்டம் 2017 திசெம்பர் 31 திகதி வரையும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஜப்பான சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தினூடாக நிதியுதவி வழங்கப்பட்ட மன்சரிவு அபாயத்தை குறைப்பதற்கான தொழிநுட்ப உதவி கருத்திட்டத்தின் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய உள்நாட்டு வரி செலுத்துவதற்காக திறைசேரயினால் வழங்கப்பட்ட ரூபா 17 மில்லியன் பணத்திலிருந்து நடைமுறை ஆண்டு முடிவில் செலவிடப்படாது மீதியாக இருந்த ரூபா 7.59 மில்லியன் ஆன பணம் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படாமல் மண்சரிவு அபாய முகாமை பிரிவின் வருமானமாக கருதி கணக்கிடப்பட்டிருந்தது.

(இ) விஷேட நில பரிசோதனை நடவடிக்கைகளுக்காக நிறுவகத்திற்கு திறைசேரியினால் வழங்கப்பட்ட ரூபா 54.60 மில்லியனில் அரணாயக பிரதேசத்தில் மண்சரிவினால் அகதியானவர்ளை மீள்குடியேற்றும் நடவடிக்கைகளின் போது ஆராய்ச்சி நிறுவனத்தால் செலவிடப்பட்ட ரூபா 6.88 மில்லியன் தொகை திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படாமல் பதிவிடப்பட்டிருந்தது.

(ஈ) புஸ்ஸல நவோத்யா வித்தியாலயத்தில் மற்றும் பதுள்ளை வெவேகம வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட மண்சரிவை குறைக்கும் கருத்திட்டங்களின் ஒப்பந்தத்தை பெற்றிருந்த ஒப்பந்தக்காரர் குறித்த ஒப்பந்தத்தை 2016 மார்ச் 04 திகதி மற்றும் 2016 ஏப்ரல் 08 திகதி கைவிட்டதன் காரணமாக நிறுவனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை ஈடுசெய்துகொள்ள அக் கருத்திட்டங்களின் ரூபா 1.66 மில்லியன் தொகையான அறவிடப்பட்டிருக்காத முற்பணத் தொகை மற்றும் அக்கருத்திட்டங்களின் ரூபா 1.57 மில்லியன் பெறுமதியான செயலாற்றுகை பிணை முறிப் பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 4.3 நிதி குறைப்பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆராய்ச்சி நிறுவனம் எனும் பெயரில் நடைமுறை கணக்கொன்று மற்றும் சேமிப்பு கணக்கொன்று அரச வங்கியொன்றில் நடாத்திச் செல்வதுடன் ஒவ்வொரு மாதமும் இறுதி வேலை நாளில் நடைமுறை கணக்கில் ரூபா 50 மில்லியன் மீதி இறுப்பாகும் வகையில் மேலதிக தொகை சுயமாக சேமிப்பு கணக்கிற்கு வைப்புச் செய்யப்படும். அதன் பிரகாரம் 2017 திசெம்பர் 29 திகதி ரூபா 356.19 மில்லியன் சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் 2017 ஆண்டு முழுததும் சேமிப்பு கணக்கில் ரூபா 331.69 மில்லியன் இற்கும் ரூபா 556.97 மில்லியன் இற்கும் இடைப்பட மீதி நிலவியது.

(ஆ) சமூக அடிப்படையிலான இடர்களை குறைக்கும் நிகழ்ச்சி திட்டத்தினை செயற்படுத்த 2015 ஆண்டு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து ரூபா 11.02 மில்லியன் ஆன பணம் ஆராய்ச்சி அமைப்பிற்கு கிடைத்திருந்ததுடன் 2016 ஆண்டினுள் ரூபா 6.00 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. மீதியாக இருந்த ரூபா 5.02 மில்லியன் பணம் 2017 திசெம்பர் 31 திகதி வரையும் பயன்படுத்தப்படாது நிலவியது.

### 4.4. மனிதவள முகாமைத்துவம்

ஆராய்ச்சி நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட பதவியணியில் 129 விஞ்ஞானி பதவிகள் உள்ளடக்கப்பட்டுள்ள போதும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிரந்தர ஆளணியில் 115 விஞ்ஞானிகள் மாத்திரமே சேவையில் உள்ளனர். எவ்வாறாயினும் விஞ்ஞானி பதவிகளிற்காக ஒப்படை அடிப்படையில் 36 அலுவலர்கள் மற்றும் நாள் அடிப்படையில் 22 அலுவலர்கள் மற்றும் 10 பயிற்சி அலுவலர்களையும் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்திருந்தது. எவ்வாறாயினும், மேலதிக நேர கொடுப்பனவிற்கு தகுதியற்ற உத்தியோகத்தர்களிற்கு மேலதிக நேர கொடுப்பனவாக மீளாய்வாண்டில் ரூபா 11.07 மில்லியன் ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 5. நிலையான அபிவிருத்தி

### 5.1 நிலையான அபிவிருத்தி நோக்கினை அடைந்து கொள்ளல்

நிலையான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு ''நிகழ்ச்சிநிரல்'' பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனத்தினாலும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதுடன், மீளாய்வாண்டு தொடர்பாக நிறுவகத்தினால் தனது விடயப் பரப்பிற்குற்படும் வேலைகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டுமென அறிந்திருந்தது. அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2030 ''நிகழ்ச்சிநிரல்'' தொடர்பாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் அறிந்திருந்த போதும், நிறுவகத்தின் விடயப் பரப்பிற்குற்படும் விடயங்கள் நிகழ்ச்சி நிரலின் நோக்கங்களுடன் நேரடியாக தோடர்ப்புபடாததனால் அதன் இலக்கு வைக்கப்பட்ட குறிகாட்டியினை இனங்காண்பது கடினமாக இருப்பதாக பணிப்பாளர் நாயகத்தினால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ள நிறுவகத்தினால் இனங்காணப்பட்ட செயல்களை தமது வருடாந்த திட்டத்திற்கு உட்படுத்தியிருக்காததுடன் அச் செயல்களை மேற்கொள்ள தேவையான நிதி ஒதுக்கீடுகளை வருடாந்த மதிப்பீட்டுக்கு உட்படுத்தி இருக்கவில்லை.

## 6. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

ஆராய்ச்சி நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவு பிரதான உள்ளக கணக்காய்வாளர் மற்றும் ஒரு உதவி உத்தியோகத்தரை மாத்திரம் கொண்டுள்ளதன் காரணமாக நிறுவனத்தின் பிரதான காரியாலயத்தில் மற்றும் மாவட்ட காரியாலயங்களில் போதிய கணக்காய்வினை மேற்கொள்ள கடினமாக இருந்தது.

### 6.2 பெறுகை மற்றும் ஒப்பந்த நடைமுறை

#### 6.2.1 பெறுகை

**(அ)** ஆராய்ச்சிசி அமைப்பினால் வாடகை அடிப்படையில் மோட்டார் வாகனங்களை பெற்றுக்கொள்வதற்கான பெறுகை தொடர்பாக பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்பட்டன.

i. 2017 ஆகஸ்ட் 01 முதல் 2018 ஆகஸ்ட் 31 வரையான காலத்திற்காக வாடகை அடிப்படையில் 11 மோட்டார் வாகனங்களை பெற்றுக்கொள்ள தனியார் நிறவனமொன்றுடன் ரூபா 36.83 மில்லியன் ஆன ஒப்பந்தம் கைச்சாதிடப்பட்டிருந்த போதும் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.8 பந்தி பிரகாரம் செயலாற்றுகை காப்பொன்றை பெற்றுக்கொள்ளாத காரணத்தால் நிறுவனத்திற்கு ஏற்பட்ட ரூபா 1.84 மில்லியன் ஆன இழப்பிலிருந்து ரூபா 0.28 மில்லியனை மாத்திரமே அறவிடக்கூடியதாக இருந்தது.

ii. விலை மணு கோரல் பதிவேட்டின் 1(அ) பந்தி பிரகாரம் எல்லா வாடகை வாகனங்களும் 2005 ஆண்டில் அல்லது அதற்கு பின்னர் உற்பத்தி செய்யப்பட்ட வாகனமாக இருக்க வேண்டிய போதும் ஒப்பந்தக்காரரினால் ஈடுபடுத்தப்பட்ட 11 வாகனங்களில் 5 வாகனங்களின் பதிவு சான்றிதழ்கள் மாத்திரமே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் அவற்றில் 02 வாகனங்கள் 2005 ஆண்டிற்கு முன்னர் உற்பத்தி செய்யப்பட்ட வாகனங்கள் என அவதானிக்கப்பட்டது.

(ஆ) புதிய விஞ்ஞான கூட கட்டிட நிர்மாண பெறுகை நடைமுறை தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. பெறுகை வழிகாட்டி கோவையின் 7.8 பிரிவின் பிரகாரம் விலை மணு கையேற்பை முடிவுறுத்தும் நேரத்திற்கு முன்னர் கிடைக்கப்பெற்றுள்ள அனைத்து விலை மணுக்களையும் மதிப்பீட்டிற்கு உட்படுத்த வேண்டிய போதிலும் அதற்கு மாற்றமாக குறைந்த விலையுள்ள மணுக்கள் மாத்திரம் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டிருந்ததுடன் அவ் ஒப்பந்தக்காரரினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடத்திற்காக யாழ்பாண மா நகர சபை மூலம் சாத்தியப்பாட்டு அறிக்கை வழங்கப்பட்டிருக்காததனால் தொழில்நூட்ப மதிப்பீட்டுக் குழு உறுப்பினார்களால் குறித்த கட்டிடத்தை பௌதீக ரீதியாக பரிசீலனை செய்து நிர்மாணம் நள்ள நிலையில் இருப்பதாக உறுதியொன்றை வழங்கி அவ் ஒப்பந்தக்காரருக்கு ஒப்பந்தத்தை வழங்க விதிந்துரைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு வெளிப்படைத்தன்மையுடன் இடம் பெறவில்லை என அவதானிக்கப்பட்டது.

ii. 2016 திசெம்பர் 31 ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த போதும் 2017 பெப்ரவாரி 16 திகதியே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட 45 நாட்களான கால தாமதம் ஏற்பட்டிருந்தது. ஒப்பந்தம் பிரகாரம் நிர்மாண பணிகள் 2017 ஒக்டோபர் 12 திகதியளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதும் 2017 திசெம்பர் 31 திகதி அதன் பௌதீக முன்னேற்றம் 26.75 சதவீதமாக மட்டுமே நிலவியது. திறைசேரியினால் 2015 ஆண்டு முதல் 2017 திசெம்பர் 31 வரை இதற்காக ரூபா 350 மில்லியன் விடுவிக்கப்பட்டிருந்த போதும் 2017 ஆண்டு இறுதி வரையும் செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 121.45 மில்லியன் மாத்திரம் ஆனது.

iii. ஒப்பந்த உடன்படிக்கையின் 14.5 பந்தி பிரகாரம் இடைக்கால கொடுப்பனவு பட்டியலின் குறைந்த பட்ச பெறுமதி ரூபா மில்லியன் 12.50 ஆக வேண்டிய போதும் அப்பந்திக்கு மாற்றமாக ரூபா 1.39 மில்லியன் மற்றும் ரூபா 6.07 மில்லியனிற்கு இடயிலான பெறுமதிக்குரிய 06 இடைக்கால கொடுப்பனவு பட்டியல்களுக்காக மீளாய்வாண்டினுள் செலுத்தப்பட்டிருந்தன.

(இ) தன்னியக்க மழைமாணி நிலை நிறுத்துவது தொடர்பான பெறுகை நடைமுறைகள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

i. 2016 ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாட்டினை பயன்படுத்தி 51 மழைமாணிகள் நிலை நிறுத்த ஒப்பந்தகாரர் ஒருவரை தெரிவு செய்ய விலை மனு கோரப்பட்டிருந்ததுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த குறைந்தபட்ச விலை ரூபா மில்லியன் 38.43 ஆனதுடன் ஓராண்டினுள் பூர்த்தி செய்ய 2016 ஆகஸ்ட் 08 திகதி ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. இம் மழைமாணித் தொகுதியை மேம்படுத்த வேண்டுமென நிறுவகத்தினால் ஒப்பந்தக்காரருக்கு அறிவித்திருந்ததுடன் அதற்காக ரூபா மில்லியன் 3.35 ஆன மேலதிக மதிப்பீடொன்று முன்வைக்கப்பட்டிருந்தது. அம் மேலதிக மதிப்பீட்டின் விலைகள் தொடர்பில் மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் நிபுனத்துவ ஆலோசனை பெறப்பட்டிருந்ததுடன் அம்மதியுரைகளின் பிரகாரம் கூடிய விலைகள் உள்ளடக்கப்பட்டுள்ளது என அறிவித்திருந்த போதும் நிபுனத்துவ ஆலோசனையினை கவனிக்காது ஆரம்ப ஒப்பந்தக் காரருக்கே ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

ii. 2017 ஆண்டின் போது ஒதுக்கீட்டினை பயன்படுத்தி மேலும் 50 மழைமாணிகளை நிலை நிறுத்துவதற்கு போட்டி விலை மனு கோரப்பட்டிருந்ததுடன் அவ் விலை மனு மதிப்பீடானது பெறுகை வழிக்காட்டி கோவையின் 5.3.10 மற்றும் 7.4 பந்திகளின் அடிப்படைகளுக்கு மாற்றமாக 05 மாதங்களிற்கு விஞ்சிய காலம் செலவிடப்பட்டிருந்தது. குறைந்த விலைமனு முன் வைத்திருந்த கம்பனி விலை மனு முன்வைத்ததன் பின்னர் 2018 ஆகஸ்ட் 28 திகதி வேறொறு கம்பனியுடன் இனைந்து புதிய கம்பனி பெயரில் ஒப்பந்தத்தை ஏற்றிருந்தது. அதன் பிரகாரம் விலை மனு முன்வைக்காத நிறுவனத்திற்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

### 6.2.2 ஒப்பந்த நிருவாகம்

நிறுவனத்திற்கு கிடைக்கும் ஒப்பந்தங்களுக்காக துணை ஒப்பந்தக்காரர்கள் தெரிவு செய்வது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கேகாலை மாவட்டத்தில் செயற்படும் மண்சரிவை குறைக்கும் 03 கருத்திட்டங்கள் இரண்டு ஒப்பந்தக்காரர்களுக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தக்காரர்களால் அவ் ஒப்பந்தம் துணை ஒப்பந்தக்காரர்களுக்கு

ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ஆராய்ச்சி நிறுவனத்தின் அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை. மேலும் இக் கருத்திட்டம் தொடர்பான 2017 திசெம்பர் 31 திகதி பௌதீக முன்னேற்றம் 05 சதவீதம் முதல் 50 சதவீதம் வரையான வித்தியாசத்துடன் நிலவியதாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) கொழும்பு நகரினுள் 56 மாடிக் கட்டிடமொன்றை நிர்மானிக்க நில பரிசோதனை ஒன்றை செய்து கொள்ள தனியார் நிறுவனம் ஒன்றிடமிருந்து நிறுவகத்திற்கு ரூபா 21.80 மில்லியன் ஆன ஒப்பந்தமொன்று கிடைத்திருந்தது. நிறுவனத்தின் நில தொழில்நுட்ப பிரிவின் அலுவலர்களை ஈடுபடுத்தி மேல் ஒப்பந்த்தை 90 நாட்களில் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்ட போதும் பின்னர் அப் பணியின் ஒர் பகுதி மட்டுப்படுத்தப்பட்ட விலை மனு கோரி துணை ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. பூரண ஒப்பந்தத்தின் பிரகாரம் 46 நில அகழ்வுகள் மேற்கொள்ள இருந்ததுடன் அவற்றில் 23 நில அகழ்வுகளை மேற்கொள்ள துணை ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. கருத்திட்டத்தின் துணை ஒப்பந்தம் வழங்க அங்கீகாரம் பெறல் மற்றும் அனைத்து பெறுகை நடவடிக்கைகளும் 03 தினமான குறிகிய காலத்தில் செய்திருந்தமை கேல்விக் குறியானதுடன் ஒப்பந்தத்தை வழங்க விலை மனு திறக்கப்பட்ட தினம் முதல் 47 நாட்கள் செலவிடப்பட்டிருந்தது. முதலில் 90 நாட்களில் உள்ளக ஆளணியினால் மேற்கொள்ள திட்டமிடப்பட்ட கருத்திட்டம், ஆரம்பிக்கப்பட்டு 114 நாட்களில் பின்னர் உப ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அக் காலத்தினுள் உள்ளக ஆளணியினை ஈடுபடுத்தி வேலையினை மேற்கொள்ள இயலுமை காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது.

(இ) மகாவலி மற்றும் சுற்றாடல் அமைச்சினால் செயற்படுத்திய மகாவலி ஆற்றங்கறையை அன்மித்த விவசாயக் கிராமங்களில் மண்சரிவு அபாயத்தை குறைக்கும் வேலை திட்டத்தை செயற்படுத்த ஒப்பந்தமொன்று நிறுவகத்திற்கு கிடைத்திருந்தது. அதற்கான ஒப்பந்தத் தொகை ரூபா 20.60 மில்லியன் ஆனது. அதன் பிரகாரம் வலபனை பிரதேச செயலகப் பிரிவில் முன் கூட்டிய விபத்தை மதிப்பிடும் முறைமையொன்றை நிலை நிறுத்த நிறுவகத்தால் விலை மனு கோரப்பட்டு உப ஒப்பந்தக்காரர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். பெறுகை வழிகாட்டி கோவையின் 5.3.10 மற்றும் 7.4 பந்தி பிரகாரம் விலை மனு ஏற்புக் காலத்தினுள் மதிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை. இவ்வறிக்கையின் 6.2.1 (இ)(ii) இல் குறிப்பிடப்படுவதன் பிரகாரம் விலை மனு சமர்ப்பிக்காத கம்பனியொன்றின் பெயரில் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) கண்டி மாவட்டத்தில் 18 பாடசாலைகளின் மற்றும் 11 நெடுஞ்சாலைகளில் நிலையற்ற சாய்வுகளின் மண்சரிவை குறைக்கும் நடவடிக்கைகளுக்காக மதியுரை சேவை வழங்கும் ஒப்பந்தத்திற்கு 2015 நவம்பர் 26 கைச்சாத்திடப்பட்டிருந்தது. இதன் செயல்கள் 2017 ஆண்டளவில் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு திகதியான 2018 ஜுன் 30 வரையும் 02 பாடசாலைகளின் மற்றும் 04 நெடுஞ்சாலைகளின் வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. அதே போன்று 08 பாடசாலைகளின் பௌதீக முன்னேற்றம் 25 சதவீதத்திற்கும் 83 சதவீதத்திற்கும் இடையிலானது. 04 நெடுஞ்சாலைகளின் பௌதீக முன்னேற்றம் 45 சதவீதத்திற்கும் 95 சதவீதத்திற்கும் இடையிலானது.

## 6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டுக்கான நிதி இலக்குகளை தயாரிக்கும் போது அதற்காக மற்றும் அவ் இலக்குகளை அடைந்துகொள்ள போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்காததுடன் 2017 ஆகஸ்ட் வரை உள்ளபடியான செலவினையும் மற்றும் வருமானத்தையும் அடிப்படையாகக் கொண்டு மீண்டும் செப்தெம்பரில் திருத்தப்பட்டிருந்தது, இதன் காரணமாக பாதீடானது சிறந்த முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள நலிவுகள் காலத்திற்கு காலம் ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் | அவதானிப்பு |
| --- | --- |
| (அ) மாவட்ட அலுவலகங்களில் பதிவேடு பேனப்படல். | வரவு பதிவேடு, விடுமுறை பதிவேடு, வெளிச்செல்லல் பதிவேடு, பொருட் பதிவேடு நாளாதுவரையாக்கப்பட்டு பராமரிக்கப்படாமை. |
| (ஆ) மாவட்ட அலுவலகங்களில் கட்டுநிதி தீர்த்தல் | மாவட்ட அலுவலகங்களில் கொடுப்பனவிற்காக வவுசர் பயன்படுத்தாமை மற்றும் விலைபட்டியல் தீர்த்தல் நாளாதுவரையாக இடம் பெறாமை |
| (இ) கடன் மீதி அறவிடல் | நீண்ட காலமாக நிலுவையாக உள்ள கடன் மீதிகளை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளாமை. |
| (ஈ) பெறுகை நடவடிக்கை | மண்சரிவு அபாயத்தை குறைக்கும் கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்காக நாளாதுவரையாக பெறுகை நடவடிக்கைகள் இடம் பெறாமை. |
| (உ) மாவட்ட அலுவலகங்களில் நில தகைமை சான்றிதழ் வழங்கல் | நில தகைமை சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்காக கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படாத சந்தர்ப்பங்களை இலகுவில் இனங்காணக்கூடிய வகையில் பதிவேடு பராமரிக்கப்படாமை, கள பரிசோதனைகள் தொடர்பான அறிக்கைகள் கோவை செய்யப்படாமை, விண்ணப்பங்களில் உப அலுவலகத்தினால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய பகுதிகள் பூர்த்தி செய்யப்படாமை. |